

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 11 காலாண்டிதழ் ஏப்ரல் - ஜுன் 2017 கதிர் - 2


# தேடித் தேடி அலைந்தேன் திவ்ய தரிசனம் கண்டேன்



தேடுதல் என்று ஒரு வார்த்தை, திருவிழாவுக்கு செல்கிறோம். நமது குழந்தை காணவில்லை என்றால் தேடித் தேடி அலைகிறோம். பணப்பை தொலைந்துவிட்டால் தேடுகிறோம். வைரத்தோடு தொலைந்து விட்டால் தேடுகிறோம். இருசக்கர வாகனம் தொலைந்து விட்டது என்றால் தேடுகிறோம். கணவனை தொலைத்து விட்டு மனைவி தேடுகிறாள். மனைவியை தொலைத்து விட்டு கணவன் தேடுகிறான். தொலைப்பதும் தேடுவதும் நமது வாழ்வில் அங்கமாக இருக்கின்றன. அந்த நிகழ்வு தெரிந்து நடந்ததா? தெரியாமல்நடந்ததா? புரிந்து நடந்ததா? புரியாமல் நடந்ததா? மனைவி கணவனை விவாகரத்து செய்தால், தெரிந்துதான் செய்கிறாள். பாசம், நேசம், அன்பு குறையும்போது அதன் வெளிப்பாடாகதான் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கின்றன. ஆனால் என்னையே நான் தொலைத்துவிட்டு தேடிக் கொண்டு இருக்கிறேன். ஏன் தொலைத்தேன், தெரியவில்லை. எங்கு தொலைத்தேன் தெரியவில்லை. எதற்காகத தொலைத்தேன் தெரிய வில்லை. வெளியே தேடுவதை உள்ளேயே தேட வேண்டும். உள்ளம் ஒரு கோயில். ஊன் உடம்பு ஆலயம் என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க நமது ஜீவனுள் சிவலிங்கமாக இருக்கும் இறைவனைத் தேடவேண்டும். அப்படி தேடும்போது தொலைப்பதும் கிடையாது. தொலைந்து போவதும் கிடையாது. எது எங்கே இருக்க வேண்டுமோ அது அங்கேயேதான் இருக்கின்றது. பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நானும் எனது மனைவியும் வருடாந்திர யாகத்தை நடத்துவதற்காக மும்பைக்கு சென்றோம். இடையில் சிறு இடைவெளி கிடைத்தது. பரந்தாமன் ஆகிய பரமாத்மாவை தேடலாமே என்று தோன்றியது. பாசத்திற்கும் அன்பிற்கும் உரிய சீடர்கள் ஆன திரு. ஆல்பா மிஸ்திரி திருமதி ஆல்பா மிஸ்திரி அவர் களிடம் எண்ணத்தை வெளிப்படுத்தும் போது அவர்கள் உடனடியாக ஷண நேரத்தில் ஏற்பாடுகளைச் செய்து வழி வகுத்து கொடுத்தார்கள். பரந்தாமனை தேடி துவாரகைக்கு சென்றோம். பரமேஸ்வரனை தேடி சோம்நாத், நாகேஸ்வர லிங்கத்தை தரிசித்தோம். கிருஷ்ண சாம்ராஜ்யத்தை நடத்திய பெட் துவாரகையை பார்த்தோம். புனித பயணமாக அமைந்த அந்த யாத்திரை மறக்கமுடியாத நிகழ்வாக அமைந்தது. கண்ணன் தொலைந்து விட்டான் என்றால் யசோதா தேடுகிறாள். குருவாயூரப்பன் தொலைந்து விட்டான் என்றால் பட்டத்திரி தேடுகிறார். இறைவன் தொலைந்து போவது இல்லை. நாம்தான் அவரை தொலைத்து விடுகிறோம். காரியம் முடிந்தவுடன் மறந்துவிடுகிறோம். காலத்தால் அழியாத கலங்கரை விளக்கமாக என்றென்றும் திகழும் என் ஐயனின் மகிமை தான் என்னே!

இப்படிப்பட்ட தொலைப்பதும் தொலைந்து போகாததுமாக நம்மையே நாம் உணருவதற்காக நமது உள்ளொளியை கிளப்பும் பேராற்றல்மிக்க 18 சித்தர்களும் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளும் அம்பிகையுடன் மாடம்பாக்கம் சக்தி பீட பிருந்தாவனத்தில் அருள் பாலித்துக் கொண்டு இருக்கிறார்கள். தொலைத்தது கிடைக்கும் ஸ்தலமாக, தொலைய வேண்டியது தொலைந்து, கிடைக்க வேண்டியது கிடைக்கும், சித்தர் பூமியாக சித்தர் பீடம் விளங்குகிறது.

வழிபடுவோம். அருளாசிகளை பெறுவோம்.

-குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில்
சந்தாதாரராகி
ஸத்குருவின்
திருவருள் பெறுங்கள்

சந்தா
ரூ. 101/-



திரு. மருதபரணி – திருமதி உமாபரணி அவர்களின்

## அறுபதாம் ஆண்டு நிறைவு

**31–3–2017 அன்று நவகிரஹ சாந்தி ஹோமமும், ஆயுஷ் ஹோமமும் கோ பூஜையுடன் சாந்தி பூஜையாக நமது சக்திபீட பிருந்தாவனத்தில் நடைபெற்றது.**

## ஐந்தே நிமிடத்தில் சுந்தரகாண்டம்

சுந்தர காண்டத்தை முழுமையாகப் படிக்க நேரமில்லாதவர்கள் ஐந்தே நிமிடத்தில் இதை படித்து முடித்து விடலாம்.

சுந்தரகாண்டம் என்று பெயர் சொல்லுவார். இதை சுகம் தரும் சொர்க்கம் என்று மனதில் கொள்வார். கண்டேன் சீதையை என்று காகுஸ்தனிடம் சொன்ன கருணைமிகு ஸ்ரீராம பக்த ஆஞ்சநேயர் பெருமையிது. அஞ்சனை தனயன் அலைகடல் தாண்டவே ஆயத்தமாகி நின்றான். அனைத்து வானரங்களும் அங்கதனும், ஜாம்பவானும் அன்புடன் விடை கொடுத்து வழியனுப்பினரே! வானவர்கள் தானவர்கள் இந்திராதி தேவர்கள் வழியெல்லாம் சூழ நின்று பூமாரி பொழிந்தனரே! மைநாக பர்வதம் மாருதியை உபசரிக்க மகிழ்வுடன் மாருதியும் மைநாகனைத் திருப்தி செய்து, சுரஸையை வென்றி கண்டு அஹிம்சை வதம் செய்து சாகசமாய் சமுத்திரத்தை தாண்டியே இலங்கை சேர்ந்தான். இடக்காகப் பேசிய இலங்கையின் தேவதையை இடக்கையால் தண்டித்து இலங்கையைக் கலக்கினான். அழகான இலங்கையில் அன்னை ஜானகியை அங்கும் இங்கும் தேடியே அசோக வனத்தை அடைந்தான். சிம்சுபா மரத்தடியில் ஸ்ரீராமனைத் தியானம் செய்யும் சீதா பிராட்டியைக் கண்டு சித்தம் கலங்கினான். ராவணன் வெகுண்டிட, ராட்சஷியர் அரண்டிட வைதேகி கலங்கிட வந்தான் துயர் துடைக்க! கணையாழியைக் கொடுத்து ஜெயராமன் சரிதம் சொல்லி சூடாமணியைப் பெற்றுக் கொண்ட சுந்தர ஆஞ்சநேயர் அன்னையின் கண்ணீர் கண்டு அரக்கர் மேல் கோபம் கொண்டு அசோகவனம் அழித்து அனைவரையும் ஒழித்தான். பிரம்மாஸ்திரத்தால் பிணைத்திட்ட ஆஞ்சநேயர் பட்டாபிராமன் பெயர் சொல்ல வெகுண்ட இலங்கை வேந்தன் வையுங்கள் தீ வாலுக்கென்றான்! வைத்த நெருப்பினால் வெந்ததே இலங்கை நகர், அரக்கனின் அகந்தையை அழித்திட்ட அனுமானும், அன்னை ஜானகியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு ஆகாய மார்க்கத்தில் தாவி வந்தான் அன்னையைக் கண்டு விட்ட ஆனந்தத்தில் மெய் மறந்த அவர் ஆறாத சோகத்தில் ஆழ்ந்திருந்த ஸ்ரீராமனிடம் 'கண்டேன் சீதையை' என்றான். வைதேகி வாய்மொழியை அடையாளமாய் கூறி சொல்லின் செல்வன் ஆஞ்நேயர் சூடாமணியைக் கொடுத்தான். மனம் கனிந்த மாருதியை மார்ப்பொடு அணைத்து ஸ்ரீராமர் மைதிலியை சிறை மீட்க சித்தமானார். ஆழ்கடலில் அற்புதமாய் அணை கட்டி படைகள் சூழ அனுமானும், இலக்குவனும் உடன் புறப்பட்டார் அழித்திட்டான் ராவணனை ஒழித்திட்டான் அதர்மத்தை! அயோத்தி சென்ற ஸ்ரீராமர் அகிலம் புகழ் ஆட்சி செய்தான் அவனை சரண் அடைந்தோர்க்கு அவன் அருள் என்றும் உண்டு. எங்கே எங்கே ரகுநாத கீர்த்தனமோ அங்கே, அங்கே சிரம் மேல் கரம் குவிந்து மனம் உருகி நீர் சொரிந்து ஆனந்தத்தில் மூழ்கி இருக்கும் ஆஞ்சநேயா! உன்னைப் பணிகின்றோம் பன்முறை உன்னை பணிகின்றோம். பன்முறை உன்னைப் பணிகின்றோம்.

*தினமலர் இவவச இணைப்பிலிருந்து தொகுத்தவர் உமாபரணி*

## சக்தி பீடத்தில்

### முக்கிய தினங்கள்

**ஏப்ரல் 2017**

| | |
|---|---|
| 5 | ஸ்ரீராமநவமி |
| 8,9 | கபாலீஸ்வரர் 63 விழா |
| 10 | திருமாங்கல்ய பாக்ய திருநாள்<br>ஸ்ரீராஜகாளியம்மன் விழா<br>பௌர்ணமி, ஹஸ்த பூஜை |
| 13 | ஸ்ரீசக்திபீட கணபதி<br>பிரதிஷ்டாதினம்<br>சங்கடஹர கணபதி ஹோமம் |
| 14 | சித்திரை வருடப்பிறப்பு<br>குருஜி அவர்கள் 12 ராசி<br>களுக்கும் மாலை 5 மணியளவில்<br>ராசி பலன்கள் கூறுவார் |
| 26 | அமாவாசை |
| 29 | அக்ஷய திருதியை |

**மே 2017**

| | |
|---|---|
| 4 | அக்னி நட்சத்திரம் ஆரம்பம் |
| 7 | ஹஸ்தம் |
| 10 | சித்ரா பௌர்ணமி சக்திபீடத்தில்<br>அகண்ட சித்தர்கள் வேள்வி |
| 25 | அமாவாசை |
| 28 | அக்னி நட்சத்திரம் நிவர்த்தி |

**ஜுன் 2017**

| | |
|---|---|
| 4 | ஹஸ்தம் |
| 7 | வைகாசி விசாகம் |
| 9 | பௌர்ணமி |
| 26 | அமாவாசை |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**

அமைந்துள்ளது.
முகவரி எண். 1, சர்வமதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408, 22280407,
29710972, 8754486723
ஆசிரமம் : 2228 1337
பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
ஏர்போர்ட்டிலிருந்து S3, 810 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE ADDRESS**
A-11, Room No. 8, Ground Floor,
Shahid Bhagat Singh, CHS Ltd.,
Bindra Complex, Mahakali Caves
Road, Near Holi Spirit Hospital,
Andheri, Mumbai - 93. Ph : 28387116


### ஸ்ரீ சேஷ ஒளி விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கருப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கருப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கருப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

# ராசி பலன்கள் ஏப்ரல் - ஜுன் 2017

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை (முதல் பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். சந்திரன் உச்சம் அடைந்துள்ளார். நினைத்த காரியம் நிறைவேறும். பணபுழக்கம் நன்றாக இருக்கும். சில பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் கிடைக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல் விஷயத்தில் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் அதிக பலன் தரும். அயல்நாட்டு பிரயாணத்தால் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்கும். அரசியல்வாதிகள் குழப்பத்திலிருந்து மீளுவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் கவனம் தேவை. பணியாளர்கள் நிதானத்துடன் செயல்பட வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். அரசியல்வாதிகளுக்கு திடீர் பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவி உறவு சுமாராக இருக்கும். பொதுவாக இந்தமாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடைபெறும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர்: காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக் கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். சனியின் பாதிப்பு தெரிகிறது. குருவும் 6ம் இடத்தில் இருப்பதால் பொருளாதார விஷயத்தில் எச்சரிக்கை தேவை. சிக்கனத்தை கையாள வேண்டும். கணவன் மனைவி உறவு சாதாரண முறையில் இருக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். கலைஞர்களுக்கு நண்பர்களால் உதவிகள் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகளுக்கு அரசாங்கத்தால் பிரச்சனைகள் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சிவவாக்கிய சித்தர், கயிலாய கம்பளி சட்டைமுனி சித்தர், கிழமை : திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன், உச்சம் அடைந்துள்ளார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. எதிலும் எங்கும் வெற்றி கிடைக்கும். பணியாளர்கள் பதவி உயர்வு சம்பள உயர்வு பெறுவார்கள். வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். சின்ன திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவார்கள். விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் சொத்து தகராறில் ஈடுபட வேண்டாம். திருமணத்தடை அகலும். காதல் கைக்கூடும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குருபலன் கூடியுள்ளது. நினைத்தது நடக்கும். காதல்-திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும் பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள், தொழில் அதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். ராஜயோகம் இருப்பதால் கலைஞர்களுக்கு ஒன்றுக்கு மேல் சொத்துசேரும். மாணவர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் உண்டு. விவசாயிகள் புதிய யுக்தியின் மூலம் அதிக லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பதவி தேடி வரும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. திருமண தடை நீங்கி காதல் கைகூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பிரயாணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு நண்பர்களால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் தொல்லை உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பணியாளர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். சில அன்பர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் உண்டு. கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்பு உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை. வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், ஞாயிற்றுக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகத்தின் பலனாக மனதில் சந்தோஷம் கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு தடைப்பட்ட காரியம் கைக்கூடும். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு மாத பிற்பகதியில் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு தொழிலில் புதிய திருப்பமுனை ஏற்படும். மாணவர்களுக்கு ஆசிரியர்களால் அனுகூலம் உண்டு. விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகள் புதிய சொத்து சேர்க்கையில் ஈடுபட வேண்டாம். சற்று நிதானத்தை கடைப்பிடித்தால் இந்தமாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவும் கேந்திர ஸ்தானத்தில் உள்ளார். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு அடிதளம் அமையும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சின்னதிரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகள் சொத்து தகராறில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். நினைத்து நடக்கும். பொருளாதாரத்தில் முடக்கம் ஏற்படும். எச்சரிக்கை. பணியாளர்கள் அவசர முடிவு எடுக்க வேண்டாம். கணவன் மனைவி உறவில் பேச்சில் நிதானம் தேவை. வியாபாரிகள் தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. கலைஞர்களுக்கு பிதுருராஜித சொத்துக்கள் கிடைக்கும். மாணவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்கவும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மூன்றாம் இடத்தில் குரு இருப்பதால் பண முடக்கம் ஏற்படும். பொருளாதாரத்தை திட்டமிட்டு கொள்வது நல்லது. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். கலைஞர்களுக்கு மருத்துவ செலவு ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்கவேண்டும். விவசாயிகள் உணர்ச்சிவயப்பட்டு முடிவுகள் எடுக்கவேண்டாம். அரசியல்வாதிகள் புதியமுயற்சிகள் ஈடுபட வேண்டாம். பணியாளர்கள் அடக்கத்துடன் நடந்து கொள்வது நல்லது. பொதுவாக இந்த மாதம் சுமாரன பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராகு சம்பந்தப்பட்டு இருப்பதால் வீண் மனகுழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். பணியாளர்களுக்கு பேச்சில் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்கவும். கலைஞர்களுக்கு எதிர்பாராத திருப்புமுனை உண்டு. மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்கவேண்டும். அரசியல்வாதிகள் நண்பர்களிடம் எச்சரிக்கையாக பழகவும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

# சிம்மம்



(மகம், பூரம்,
உத்திரம் 1ம் பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். தனஸ்தானத்தில் குரு இருப்பதால் பண புழக்கம் சரளமாக இருக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். உணர்ச்சி வயப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள் தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய இடம் வாங்கும் யோகம் தெரிகிறது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு பெண்கள் மூலம் தொல்லைகள் ஏற்படும். எச்சரிக்கை. பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குருபலம் கூடி இருப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். திருமணதடை நீங்கும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு கவுரவ பதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழக்கு : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் நன்றாக உள்ளது. திருமண தடை நீங்கும். காதல் கைக்கூடும். கணவன் மனைவி அளவாக பேசவேண்டும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். இசை கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. தாய் தந்தையால் மாணவர்களுக்கு உதவி உண்டு. விவசாயிகளுக்கு மனமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி நடக்கும். அரசியல்வாதிகள் சொத்து சேர்க்கையில் ஈடுபடுவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# கன்னி



(உத்திரம் 2, 3, 4
பாதம், ஹஸ்தம்,
சித்திரை 1, 2 பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்ம குருவால் மனகலக்கம் ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கணவன் மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. அயல்நாட்டு பிரயாணத்தால் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் தெரிகிறது. விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகள் சகோதர சகோதரிகளுடன் எச்சரிக்கையுடன் பழகுவது நல்லது. பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளி யம்மன், கிழமை : வெள்ளி கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்மத்தில் குரு இருப்பதால் பொறுமையை கடைபிடிக்கவேண்டும். கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுதல் நலம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். சின்னதிரை கலைஞர்கள் அதிக லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவு ஏற்படும். அரசியல்வாதிகள் நல்இரவு பிரயாணத்தை தவிர்க்க வேண்டும். பணியாளர்கள் பொருளாதாரத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகபேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். ஜென்மத்தில் குரு இருப்பதால் மனபுழுக்கம் அதிகரிக்கும். பணபுழக்கம் கடினமாக இருக்கும். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்கவும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகளை எடுக்கவேண்டாம். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் நண்பர்களை அதிகம் நம்பகூடாது. விவசாயிகளுக்கு கடன் தொல்லையால் அவதி ஏற்படும். அரசியல்வாதிகள் ஏமாற்றப்படுவார்கள். எச்சரிக்கை. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

# துலாம்



(சித்திரை 3, 4 பாதம்,
சுவாதி, விசாகம்
1, 2, 3, பாதம்)

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குடும்பத்தில் சுபவிரயங்கள் ஏற்படும். உடல்நலத்தில் கவனம் தேவை. சில அன்பர்களுக்கு புதுமனை புகுவிழா செய்வதற்கு யோகம் உண்டு. பணியாளர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வு பெறுவார்கள். வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பாராத திருப்புமுனை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம் உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் உச்சம் அடைந்துள்ளார். குடும்பத்தில் சுப விரையங்கள் ஏற்படும். சில அன்பர்களுக்கு வீடு வாங்கும் யோகம் உண்டு. பணியாளர்களுக்கு மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். அளவோடு பழகினால் கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். கலைஞர்களுக்கு தாய்வழி சொத்து கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணிசித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். திருமணம் நடக்கும். பணியாளர்கள் மனதில் குதூகலம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு புதிய வாகன சேர்க்கை ஏற்படும். அரசாங்கத்தால் அரசியல்வாதிகளுக்கு புதிய லாபம் உண்டு.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

# விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம்,
அனுஷம்,கேட்டை )

**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் ஆட்சி அடைந்துள்ளார். நினைத்த காரியம் நிறைவேறும். காதல் - திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபடலாம்.

வியாபாரிகள், தொழில் அதிபதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். அயல்நாட்டு பிரயாணத்தால் கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடை நீங்கும். விவசாயிகள் அரசாங்கத்தால் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை. வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 29 முதல் 31 தேதி வரை, மே 2ம் முதல் 4ம் தேதி வரை, முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடியுள்ளது. காதல்-திருமணம் தடை அகலும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சுப பலன்கள் நடக்கும். திருமண தடை நீங்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு ஏழரை சனி இருப்பதால் கடனை தவிர்க்கவும். கலைஞர்களுக்கு மருத்துவ செலவுகள் ஏற்படும். கரும்பு விவசாயிகள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத்தவிர்க்கவும்.

## தனுசு
(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும் எங்கும் நிதானம் தேவை. கணவன் மனைவி விட்டு கொடுத்து பழகுவது நலம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். இசைக் கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பயணத்தின்போது எச்சரிக்கை தேவை. பொதுவாக இந்த மாதம் சாதாரணமாகவே அமையும்.

அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. வழிபட வேண்டிய சித்தர்கள் : வள்ளலார் சித்தர், இடைக்காடர் சித்தர், கிழமை : புதன்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படலாம். வியாபாரிகள் தொழிலதிபர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. சின்னதிரை கலைஞர்கள் லாபம் அடைவார்கள். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் பிரயாணத்தின்போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 29 முதல் 31 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கர்ம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும் எங்கும் நிதானம் தேவை. பணியாள்கள் அதிக கவனத்துடன் வேலை செய்ய வேண்டும். கணவன் மனைவி உறவு சாதாரணமாகவே இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அரசாங்கத்தால் வரி தொல்லை ஏற்படும். சின்ன திரை கலைஞர்களுக்கு எதிர்பாராத தொடர்பு ஏற்படும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு வங்கிகளால் அனுகூலம் ஏற்படும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையுடன் பிரயாணம் செய்யவும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்
(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)



**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரையஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. கணவன்-மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். சில அரசியல்வாதிகள் பதவியை இழப்பார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் விரையம் பெற்றுள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு தென்படுகிறது. பொருளாதாரத்தை சரிவர திட்டமிட்டு கொள்ள வேண்டும். கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் தெரிகிறது. விவசாயிகள் பிரயாணத்தின்போது கவனமாக இருக்கவேண்டும். அரசியல்வாதிகளுக்கு கௌரவ பதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் 12 ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. உடல் நலத்தில் கவனம் தேவை. குருபலம் இருப்பதால் சுப நிகழ்வுகள் நடக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு அயல்நாட்டு தொடர்பு ஆதாயம் தரும். மாணவனர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு திடீர் பணவரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு சொத்து சேர்க்கை ஏற்படும். உடல் நலத்தில் கவனமாக இருந்தால், பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்
(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்



**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பொருளாதாரத்தை சரியான முறையில் கையாள வேண்டும். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு பண முடக்கம் ஏற்படும். கலைஞர்களுக்கு திடீர் பிரயாணத்தால் ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகள் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். அரசியல்வாதிகள், இரவு நேர பிரயாணத்தை தவிர்க்கவும். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி கிழமை, வழிபட வேண்டிய கடவுள்: சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாபம் அடைந்துள்ளார். அஷ்டமகுரு இருப்பதால் பொருளாதார முடக்கம் ஏற்படும். எச்சரிக்கை தேவை. பணியாளர்கள் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத திருப்புமுனை ஏற்படும். மாணவர்கள் கவனத்துடன் படிக்க வேண்டும். விவசாயிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அரசியல் வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பொது வாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணா மூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மனகுழப்பம் ஏற்படும். சஞ்சலங்களுக்கும் சபலங்களுக் கும் இடம் கொடுக்க வேண்டாம். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுவது நலம். பணியாளர்கள் எச்சரிக்கையுன் இருக்க வேண்டும். வியாபாரிகள், தொழி லதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க் கவும். கலைஞர்களுக்கு நண்பர்களால் தொல்லை உண்டு. மாணவர்கள் பழக்க வழக்கங்களில் கவனமாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு கொலை மிரட்டல் ஏற்படும். பொதுவாக எச்சரிக்கையுடன் இருந்தால் இந்த மாதம் சுமாரான பலன்களே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 5 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்
(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)



**ஏப்ரல்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அல்லல் நீங்கி அமைதி காணலாம். காதல் - திருமணம் கைக்கூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். கலைஞர்களுக்கு உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு புதிய வாகனம் யோகம் உண்டு. அயல்நாட்டு பிரயாணம் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் கொடுக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய சித்தர் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மே**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராசிக்கு குருபார்வை இருப்பதால் நினைத்த காரியம் நடக்கும். காதல்-திருமணம் கைக்கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு சக நண்பர்களால் உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு நகை வாங்கும் யோகம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிதேடி வரும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகனி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஜுன்**

மாத ஆரம்பத்தில் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல் திருமணம் கைக்கூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். கலைஞர்களுக்கு குடும்பத்தில் சுப நிகழ்வுகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**சக்திபீட கணபதி பிரதிஷ்டாதினம் அன்று (13-4-2017) சக்திபீடத்தில் ஸ்ரீ சங்கடஹர கணபதி ஹோமம் நடைபெற உள்ளது. அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

## மும்பையில் கடந்த 12-2-2017 அன்று நடந்த ஹோமங்களின் காட்சிகள்











ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அருட்கடாட்சத்தினாலும், குருஜிஸ்ரீ கே.வி.எல்.என். சர்மாஜி அவர்களின் வழிகாட்டுதலினாலும் ஆசீர்வாதத்தினாலும் மும்பையில் பிப்ரவரி 12ம் தேதியன்று காலை 6 மணியிலிருந்து கணபதி ஹோமம், கோ பூஜை, த்ரைலோக்ய மோஹன கௌரி ஹோமம், ராஜமாதங்கி ஹோமம், செங்கோல் பூஜை, பகல் 1 மணிக்கு பூர்ணாஹுதியுடன் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் பெருந்திரளாக வந்து மனநிறைவுடன் ஆனந்தத்தில் திளைத்தனர். பிறகு மாலை 4 மணிக்கு லலிதா ஸஹஸ்ரநாம பாராயணமும், ப்ரசாத விநியோகத்துடன் இனிதே முடிவடைந்தது.

இந்த ஹோமங்களின் ப்ரத்யேக ஆகர்ஷணமாக இருந்தது. "செங்கோல் பூஜை" அம்பாளை "ராஜமாதங்கி"யாக அலங்காரம் செய்து வைத்து, அவளின் கையில் வெள்ளியினால் செய்யப்பட்ட செங்கோல் வைக்கப்பெற்றது. இந்த செங்கோலை பக்தர்களே, தங்கள் கரங்களில் ஏந்தி, செங்கோல் பூஜை செய்து, அவரவர்கள் மனோரதங்கள் நிறைவேற வேண்டி மகிழ்ந்தனர்.

இந்த ஹோமங்கள், மற்றும் செங்கோல் பூஜை நிறைவேறிய சில நாட்களிலேயே பல அன்பர்கள் எங்களிடம் வந்து, பல காலங்களாக அவர்களுக்கு நிறைவேறாத காரியங்கள் உடனே நடந்ததாக கூறி மிகவும் ஆனந்தம் அடைந்தார்கள். இது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை கொடுத்தது. இந்த மாதிரியான ஹோமங்கள், உலக மக்களின் நன்மைக்காகவும், உலக க்ஷேமத்திற்காகவும் செய்யப்படுகிறது. "கை மேல் பலன்" என்று கூறுவதுபோல் இந்த பூஜைகளை செய்த உடனேயே, பக்தர்களுக்கு ஒரு நல்ல திருப்புமுனை வந்ததாக எங்களிடம் தெரிவித்தது. எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை கொடுத்தது.

இந்த ஹோமங்கள் சேஷாத்ரி ஸ்வாமிகள் டிரஸ்டின் மும்பை கிளையின் 12ஆவது வருட வைபவமாக இனிதே நடந்தேறியது. இதுபோலவே ஒவ்வொரு வருடமும் ஸத்குருவின் க்ருபாகடாட்சத்தினாலும், குருஜியின் ஆசீர்வாதத்தினாலும் மேலும் பல அரிய ஹோமங்களை உலக க்ஷேமத்திற்காக நாங்கள் மும்பையில் செய்வதற்கு அவர்களின் அருளை வேண்டுகிறோம்.

# சேஷாத்ரி நாதா

அன்னையாய் இருந்து
அருளினைத் தந்து
அமுதினை ஊட்டிடும் சேஷாத்ரி நாதா!

ஆணவம் நீக்கி
ஆனந்தம் தந்திடும்
ஆலகண்டனே சேஷாத்ரி நாதா!

இதயக் குகையில்
இறையாய் நின்று
இன்னல் தீர்ப்பாய் சேஷாத்ரி நாதா!

ஈகைக்கும் தந்து
ஈடில்லா புகழ்தரும்
ஈசனே சர்வேஸ்வரனே சேஷாத்ரி நாதா!

உதவாதவன் என
உதறியே விட்டவனை
உருப்பட வைத்திட்டாய் சேஷாத்ரி நாதா!

ஊண் உறக்கமின்றி
ஊர் சுற்றியவனை
ஊர் பேர் அறியச் செய்தாய் சேஷாத்ரி நாதா!

எளியனாய் இருந்து
எதனிலும் நின்றாய்
எல்லையற்றவனே சேஷாத்ரி நாதா!

ஏற்றம் தந்து
ஏழையை காப்பாய்
ஏகாம்பரனே சேஷாத்ரி நாதா!

ஐம்புலன் அடக்கி
ஐயனைத் தொழுதேன்...!
ஐம்பூதங்களாய் நின்ற சேஷாத்ரி நாதா!

ஒவ்வொரு அழைப்பிற்கும்
ஓடியே வந்தருளும்
ஒப்பிலா மணியே சேஷாத்ரி நாதா!

ஓதும்மறை நீ
ஓங்காரமும் நீ
ஓம் நமச்சிவபால சேஷாத்ரி நாதா!

ஔடதம் நீக்கி
ஔவை போல் காக்கும்
ஔதாரிய நாதரே சேஷாத்ரி நாதா!

அஃதென உனை கூறி
இஃதென உனை தேடி
எஃகாய் உருகினேன் சேஷாத்ரி நாதா!

எதற்கிந்த நடுக்கம்?
ஏனிந்த தயக்கம்?
என்ன செய்வேன்? நான் சேஷாத்ரி நாதா!

யார் வந்து தடுத்தாலும்
யாது செய்தாலும்?
நீயே என் துணை சேஷாத்ரி நாதா!

- ஜெயந்தி முரளி

### மாடம்பாக்கம் சக்தி பீடமும் நாம ஸங்கீர்த்தமும்

(மன்னார்குடி பாபு ராஜகோபால பாகவதர்)

விஷ்ணு புராணப்படி ஒவ்வொரு யுகத்திலும் ஒரு தருமம், ப்ரபாவம் சொல்லப்பட்டுள்ளது. அதன்படி க்ருதயுகத்தில் த்யானம் செய்தும், த்ரேதா யுகத்தில் யாகங்கள் செய்தும், துவாபர யுகத்தில் அர்ச்சனைச் செய்தும் அடையக்கூடிய பலன்கள் அனைத்தும் தற்சமயம் உள்ள யுகத்திலே, அதாவது கலியுகத்திலே நாமஸங்கீர்த்தனத்தைத் தவிர வேறு மார்க்கங்கள் சாத்தியமாகாது. இது உணரப்பட்டுதான் சமீபகாலமாக குறிப்பாக சுமார் 50 ஆண்டுகளாக பல இடங்களிலே நாமஸங்கீர்த்தன வைபவங்கள் நடைபெறுகின்றன.

மாடம்பாக்கம் சக்திபீட பிருந்தாவன வளாகத்திலே நாம ஸங்கீர்த்தனம் 16-3-2000 முதல் தொடங்கி, ஒவ்வொரு புதன், வியாழன், ஞாயிறு கிழமைகளிலே, அதாவது ஒரு வாரத்திலே 3 நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த நிகழ்ச்சி பஜனை மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை நடைபெறுகிறது. இதுவரை அதாவது 30-3-2017 நிலவரப்படி சரியாக 1707 (ஒரு ஆயிரத்து எழுநூற்று ஏழு) நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்த நாம பஜனை வைபவம், நமது குருஜி அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க, மன்னார்குடி ஸ்ரீ பாபு ராஜகோபால பாகவதர் மற்றும் ஸ்ரீ சிவராம பாகவதர் குழுவினரால் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நாம ஸங்கீர்த்தன நிகழ்ச்சி ஸம்ப்ரதாய பஜனை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. இதன் விபரங்கள் 2016 ஆண்டு ஜூலை மாத சேஷ ஒளி பத்திரிகையில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை நடைபெற்ற நாமஸங்கீர்த்தனை எண்ணிக்கை குறித்து, நமது அன்பு மதிப்பு மரியாதைக்குரிய ஸ்ரீ சர்மா குருஜி அவர்களிடம் ஒரு வாரம் முன் தெரிவிக்கப்பட்டது. அவர் அதைக்கேட்டு பாராட்டி, இந்த நாம ஸங்கீர்த்தனம் தொடர்ந்தே நடைபெறவேண்டும் என்றும் அதற்கு ஒரு கால கெடு எதுவும் கிடையாது என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமி, பதினெட்டு சித்தர்கள் அருளாலும் நமது குருஜி அவர்களின் இதய பூர்வமான ஆசிகளாலும் நாம ஸங்கீர்த்தனம் தொடர்கின்றது. இந்த வைபவத்தின் ஒவ்வொரு பகுதியைப் பற்றி வரும் இதழ்களில் விரிவாக எழுதப்படும்.

## திருமாங்கல்ய பாக்ய திருநாள்

10-4-2017 அன்று நமது சக்திபீட பிருந்தாவனத்தில் ராஜ காளியம்மனுக்கு விசேஷ அபிஷேகம், பூஜைகள் நடைபெறு கிறது. இதில் கலந்துகொண்டு அனைவரும் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினென் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

SRI SESHA OLI - R.Dis . No. 795/2006



மாட்டுப்பொங்கலன்று நந்தியை அலங்கரித்திருக்கும் காட்சி



குருஜி அவர்கள் மாட்டுப் பொங்கலன்று மாட்டுக்கு தீவனம் தரும் காட்சி



சக்திபீடத்தில் ஜெயந்தி விழாவின் போது குருஜி அவர்கள் திருமதி ப்ரியா நடராஜனுக்கு விண்ணுலக ஒளிபரத் தாரகை என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கும் காட்சி



சக்திபீடத்தில் ஜெயந்தி விழாவின் போது குருஜி தம்பதிகள் திருமதி உமாமகேஸ்வரிக்கு சேவைக் கவிக்குயில் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கும் காட்சி


## ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எஸ்.எஸ். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மதுசுதனன்
திருமதி. உமாமகேஸ்வரி

அலுவலக உதவியாளர்
சர்வேஸ்வரி

வடிவமைப்பு
திருமதி. பிரியா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

பால் விநியோகம் : பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

இதனால் ஏற்படும் பலன்கள் :

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணரின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.





அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.